**மாண்புமிகு மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், கோயமுத்தூர்**

முன்னிலை : **திருமதி. S. தனலட்சுமி, பி.ஏ., பி.எல்.,**

மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,

கோயமுத்தூர்

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 06 ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்.1192/2020**

**(CNR No.TNCB08-002240/2020)**

D.மனோகரன் ... வாதி

/ எதிர் /

திருமதி.அற்புதலில்லி ...பிரதிவாதி

இவ்வழக்கானது 19.06.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.D.கார்த்திக்பிரபு, அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A.ஜோஸ்பின் நிருபாமா, அவர்கள் முன்னிலையாகி உள்ளார்கள். இரு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், பிரதிவாதி தரப்பில் வாதுரை கேட்கப்பட்டும், இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ;

**தீர்ப்புரை**

தாவா சொத்தை பொறுத்து வாதி தான் உரிமையாளர் என பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரமும், தாவா சொத்தை பிரதிவாதி எந்தவித வில்லங்க விவகாரங்களுக்கும் உட்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம்** :

**2.1** வாதி, பிரதிவாதியின் கணவர் ஆவார். வாதியின் முதல் மனைவின் பெயர் சாருலதா. மேற்படி சருலதா மற்றும் வாதி ஆகியோர்களுக்கு ரஞ்சித்குமார் என்ற மகன் உள்ளார். மேற்படி ரஞ்சித்குமார் 5 வயது இருக்கும் போது வாதியின் முதல் மனைவியான சாருலதாவிற்கு வேறு ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டு வாதி மற்றும் அவரது மகன் ரஞ்சித்குமாரை விட்டுவிட்டு சென்று விட்டார். மேற்படி வாதி தனது குழந்தையை நல்ல முறையில் வளர்க்க வேண்டி கடந்த 1998 ம் ஆண்டு பிரதிவாதியை திருமணம் செய்து கொண்டார்.

**2.2** மேற்படி பிரதிவாதி கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர். பிரதிவாதியை திருமணம் செய்தவற்கு முன்பு கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறி திருமணம் செய்து கொண்டார். வாதிக்கும் பிரதிவாதிக்கும் திருமணத்தின் பயனாக எவ்வித குழந்தைகளும் இல்லை. வாதி கோவை சிங்கநல்லூரில் உள்ள சாந்தி கியர்ஸ் என்ற நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்த சமயத்தில் தனது குடும்பத்திற்கென சொந்தமாக வீடு வாங்குவதற்காக முயற்சி செய்தார். அதன் அடிப்படையில் கோவை மகாலிங்கபுரத்தில் உள்ள தாவா சொத்தை கடந்த 13.04.2010 தேதியன்று கிரையம் பெறும் போது பிரதிவாதி தனது மனைவியான அற்புதலில்லி பெயரில் கிரையம் வாங்கியிருந்தார்.

**2.3** மேற்படி கிரைய ஆவணமானது கோவை சிங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3011/2010 என்ற ஆவணமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாவா சொத்தை வாதியின் மனைவியான

பிரதிவாதியின் பெயரில் வாங்கியதற்கு காரணம் என்னவென்றால் தன்னையும், தன் மகன் ரஞ்சித்குமாரை நல்ல முறையில் கவனித்துக்கொள்வார் என்றும், வாதியின் காலத்திற்கு பிறகு ரஞ்சித்குமாருக்கு மேற்படி சொத்தை கொடுத்து விடுவார் என்ற எண்ணத்தில் வாங்கியுள்ளார்.

**2.4** தாவா சொத்தானது பிரதிவாதியின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டிருந்தாலும், பிரதிவாதி பெயரளவில் தான் உரிமையாளர் ஆவார். தாவா சொத்து கிரையம் வாங்குவதற்கு உண்டான தொகையை வாதி ஹோம் பைனான்ஸ் நிறுவனத்தில் வீட்டு கடன் அதனை தனது மாத சம்பளத்திலிருந்து செலுத்தி வந்துள்ளார். தாவா சொத்தை கிரையம் வாங்கியதற்கான முழுக் கடனையும் செலுத்திவிட்டார். வாதி கடந்த 2018 ம் ஆண்டு தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் அவருக்கு பணி ஓய்வின் போது கொடுக்கப்பட்ட ரூ.7,50,000/- தொகையை தனது உறவினர்களான அருண்குமார் மற்றும் டேனியல் சுந்தர்சிங் ஆகியோர்களுக்கு வட்டிக்கொடுத்துள்ளார். மேற்படி வட்டித்தொகையை வாதியிடம் செலுத்தி வந்துள்ளார்கள்.

**2.5** கடந்த 29.11.2020 தேதியன்று வாதி மற்றும் அவரது மகன் வீட்டில் இல்லாத நேரத்தில், தாவா சொத்தின் அசல் ஆவணங்கள், மேற்படி சொத்திற்குண்டான வரி வகையறாக்கள் உள்ளிட்ட ஆவணங்களையும், சுந்தரம் பைனான்ஸ் ல் கடன் கட்டி முடித்ததற்கான NOC சான்றிதழ், பிரதிவாதியின் துணிமணி ஆகியவற்றை எடுத்துக் கொண்டு வாதியின் உடன் சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள் சேர்ந்த சதி செய்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டுமென்பதற்காக திட்டமிட்டு

சென்றுள்ளார். மேற்படி தாவா சொத்து பிரதிவாதியின் பெயரில் கிரையம் வாங்கியருந்தாலும், கிரையம் பெறுவதற்கு வாதிதான் பணம் செலுத்தியதால் பிரதிவாதி பெயரளவில் தான் உரிமையாளர். தாவா சொத்தில் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் கிடையாது. தாவா சொத்தில் தற்போது வாதி மற்றும் அவரது மகன் இருந்து வருகிறார்கள்.

**2.6** மேற்படி பிரதிவாதி தாவா சொத்தை வேறு நபர்களுக்கு விற்பனை செய்ய முயற்சி செய்து வருவதாக வாதிக்கு தெரிய வந்தது. அது மட்டுமல்லாமல் வாதி மற்றும் அவரது மகன் ரஞ்சித்குமார் மீதும் கோவை இராமநாதபுரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வாதி பிரதிவாதியை கொடுமை செய்வதாக கூறி பெய்யான புகார் ஒன்றை கொடுத்துள்ளார். மேற்படிபுகார் தற்போது நிலுவையில் உள்ளது. எனவே தாவா சொத்தை பொறுத்து வாதி தான் உரிமையாளர் என விளம்புகை பரிகாரமும், பிரதிவாதி தாவா சொத்தை எவ்வித வில்லங்க விவகாரங்களுக்கும் உட்படுத்தக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>** :-

**3.1** வழக்குரை பத்தி 2 ல் வாதியும் ,பிரதிவாதியும் கணவன் மனைவி என்றும், வாதியின் இரண்டாவது மனைவி பிரதிவாதி என்பதையும் ஒப்புக்கொள்கிறார். வாதி தனது குழந்தையை நல்ல முறையில் வளர்க்கவும், பராமரிக்கவும் பிரதிவாதியை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்பதை மறுக்கிறார். வாதியின் முதல் மனைவிக்கு பிறந்த மகனை தனியாக வாழ ஏற்பாடு செய்து விட்டதாகவும்,

வாதியும், பிரதிவாதியும் நல்ல முறையில் குடும்பம் நடத்தலாம் என்பதை நம்பி கடந்த 1998 ம் ஆண்டு கிறிஸ்துவ முறைப்படி திருமணம் நடைபெற்றுள்ளது. மேற்படி திருமணத்தில் பிரதிவாதிக்கு 15 பவுன் தங்க நகை, வாதிக்கு 1 பவுன் மோதிரம், 1 பவுன் கை செயின் உள்ளிட்டவை சீதனமாக வழங்கப்பட்டது.

3.2 மேற்படி திருமணத்திற்கு பின்பு வாதி கூறியது போல் முதல் மனைவியை விவாகரத்து செய்யவில்லை என்றும், அவர் வேறு ஒருவருடன் பழக்கம் ஏற்பட்டு சென்றுவிட்டதால் ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் திருமணம் முறிவு ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார். வாதியை மதம் மாற காட்டாயப்படுத்தவில்லை என்றும் அவர் தனது சுய விருப்பத்தின் பெயரில் தான் மதம் மாறினார். பிரதிவாதியுடன், வாதி தாம்பத்திய உறவில் இல்லாமல் இருந்ததற்கு பிரதிவாதி கேட்தற்கு ஏற்கனவே குழந்தை இருப்பதால் வாரிசுகள் வேண்டாம் என கூறியுள்ளார்.

3.3 வாதி சாந்தி கியர்ஸ் என்ற நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்தார் என்பதை ஒப்புக்கொள்கிறார். வாதி, பிரதிவாதியும் திருமணம் முடிந்த பிறகு வாடகை வீட்டில் தான் குடியிருந்து வந்துள்ளார்கள். மேலும் பிரதிவாதி கடந்த 1998-1999 ல் ராசிபுரத்தில் உள்ள SACRER HEART ENGLISH MEDIUM SCHOOL -ல் வேலை பார்த்து அதன் பின்னிட்டு Bethel Matriculation School St.Johns Nursery and Primary School, Coimbatore out lay of Velankanni Matriculation School ஆகிய பள்ளிகளில் கடந்த 2008 ம் ஆண்டு வரை ஆசிரியராக ரூ.12,000/- சம்பளத்திற்கு பணிபுரிந்துள்ளார். மேற்படி வாடகை வீட்டில் வசித்து

வந்ததால் சொந்த வீடு வாங்க வேண்டுமென்ற எண்ணத்தில் வாதியிடம் கேட்ட பொழுது தன்னிடம் பணம் இல்லையென்றும், பிரதிவாதியின் சீதன நகை 15 பவுன்களை விற்பனை செய்ய வேண்டுமென சொன்ன ஆசை வார்த்தையை நம்பி மேற்படி நகைகளை விற்றும், தான் பணிபுரிந்த சமயத்தில் சேமித்த பணம், மற்றும் உறவினர்களிடம் வட்டியில்லாத கடன் ஆகியவைகளை சேர்த்து ரூ.6,50,000/- பணத்தை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.

**3.4** அதன் பின்னர் தாவா சொத்தை ஒரு கிருஷ்ணன் என்பவரிடம் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் தேதி ரூ.10,50,000/-க்கு கிரையம் பேசி அதற்கு முன் பணமாக ரூ.6,50,000/-த்தை கொடுத்து ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. மூன்று மாத காலத்திற்கு மீதி கிரைய தொகையை செலுத்தி கிரையம் பெற்றுக் கொள்ள வேண்டுமென பேசி முடிக்கப்பட்டதன் பேரில் மூன்று மாத காலத்திற்குள் தொகையை செலுத்த முடியாததால், வங்கி மூலம் கடன் பெற்று கிரையம் பெறலாம் சுந்தரம் ஹோம் பைனான்ஸ்ல் வீட்டுக்கடன் கேட்ட போது பிரதிவாதிக்கு ஊதியம் வங்கி கணக்கின் வரவில்லை என்பதால் அவரது பெயரில் கடன் வாங்க முடியாது என கூறியுள்ளதால் , வாதியிடம் கேட்ட பொழுது முதலில் வாதி மறுத்துள்ளார் என்றும், பிறகு பிரதிவாதி மாத மாதம் தொகையை ரொக்கமாக செலுத்தி விடுவதாக கூறியதன் பேரில் வாதி ஒப்புக்கொண்டுள்ளார்.

**3.5** ஆகவே மேற்படி வீட்டு கடன் மூலம் தொகையை ஏற்பாடு செய்து கடந்த 13.04.2010 தேதியன்று கிரைய ஆவண எண்.3011/2010 தாவா சொத்தானது பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டது. பிரதிவாதி, வாதிக்கு மாத மாதம் வங்கி

கடனுக்கு பிடித்தம் செய்த ரூ.7,041/- தொகையை செலுத்தி வந்துள்ளார். கடந்த 29.11.2020 வாதி வீட்டில் இல்லாத நேரத்தில் தாவா சொத்தின் அசல் ஆவணங்கள், மேற்படி சொத்திற்குண்டான வரி வகையறாக்கள் உள்ளிட்ட ஆவணங்களையும், சுந்தரம் பைனான்ஸ்ல் கடன் கட்டி முடித்ததற்கான NOC சான்றிதழ், பிரதிவாதியின் துணிமணி ஆகியவற்றை எடுத்துச் சென்று விட்டார் என்பது முற்றிலும் பொய்யானதாகும்.

**3.6** வாதியின் முதல் மனைவியின் கணவர் இறந்து விட்டதால் அவரை பிரதிவாதியும், வாதியும் குடியிருக்கும் வீட்டில் ஒன்றாக குடியிருக்க வைத்ததால் அதனை பிரதிவாதி எதிர்த்து வந்த பொழுது, எந்த ஆதரவும் இல்லை என்றும் நம்மோடு இருந்த விட்டு போகட்டும் என வாதி கூறியுள்ளார். இந்நிலையில் வாதியின் முதல் மனைவி சாருலதா, மகன் ரஞ்சித்குமார் ஆகியோர் பிரதிவாதியை மிரட்டி உனக்கு வாரிசு இல்லை என்றும், வாதியின் பெயருக்கோ அல்லது வாதியின் மகன் பெயருக்கோ தாவா சொத்தை எழுதிக்கொடுக்க வேண்டுமென மனதளவிலும், உடலளவிலும் சித்ரவதை செய்து வந்துள்ளார்கள். மேலும் 25.11.2020 தேதியன்று பிரதிவாதியை தாக்கி வீட்டிலிருந்து துரத்தி விட்டனர். பிரதிவாதி ஆதரவு எதுவும் இல்லாத நிலையில் கோயமுத்தூர், மகாலிங்கபுரத்திலுள்ள தனது தங்கை வீட்டில் இன்று வரை வசித்து வருகிறார்.

**3.7** மேற்படி பிரச்சனை குறித்து 27.11.2020 தேதியன்று அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில் வாதியின் முதல் மனைவி, வாதி, வாதியின் மகன் ஆகியோரை ஆஜராக கூறியுள்ளார்கள். மேற்படி காவல் நிலைய

விசாரணையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக மேற்படி வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார். மேலும் பிரதிவாதி, வாதியின் மீது மாண்பமை மதுக்கரை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குடும்ப வன்முறை தடுப்புசட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு அளிக்கப்பட்டு அது நிலுவையில் இருந்து வருகிறது. பிரதிவாதியின் சீதன நகை மற்றும் வருமானம், சேமிப்பு ஆகியவற்றை கொண்டு தான் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளதால் பிரதிவாதி தான் உண்மையான உரிமையாளர் ஆவார். வாதி தாவா சொத்தை சட்டத்திற்கு புறம்பான வழியில் ஆக்கிரமிப்பு செய்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார். எனவே வாதி உண்மை சங்கதிகளை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. எனவே பிரதிவாதி தரப்பு செலவுத் தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் கீழ்காணும் எழுவினாக்களை வனைந்துள்ளது.

5. <u>எழுவினாக்கள்</u>:-

1. தாவா சொத்திற்கு வாதி தான் உரிமையாளர் என்ற விளம்புகை பரிகாரம் பிரதிவாதிக்கு எதிராக வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?

2. தாவா சொத்தை பிரதிவாதி எவ்வித வில்லங்க விவகாரங்களுக்கும் உட்படுத்தக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

3. வாதிக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் என்ன ?

**6. சாட்சிய விசாரணை குறிப்பு :-**

வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணம் குறியீடு செய்யப்பட்டும், வாதி தரப்பில் S.மணி வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.6 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7. தீர்வு :**

**எழுவினா எண்.1 ற்கான தீர்வு :-**

***1. தாவா சொத்திற்கு வாதி தான் உரிமையாளர் என்ற விளம்புகை பரிகாரம் பிரதிவாதிக்கு எதிராக வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?***

**7.1** பிரதிவாதி வாதியின் இரண்டாவது மனைவி என்பதும், வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்பதும், வாதி மற்றும் சாருலதாவின் மகன் ரஞ்சித்குமார் என்பதும் இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகள் ஆகும், அதில் பிரச்சனை ஏதும் இல்லை.

**7.2** தாவா சொத்து பிரதிவாதி பெயரில் உள்ளது என்பதை வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் கூறுகிறது. வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் 13.04.2010 ம் தேதி ரூ.5,25,000/- த்திற்கு கிரையம் பெறப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 வாதியும், பிரதிவாதியும் சுந்தரம் ஹோம் நிதி நிறுவனத்திற்கு Memorandum confirming deposit of tile deed எழுதிக்

கொடுத்தற்கான நகல். வா.சா.ஆ.3 வாதி சுந்தரம் ஹோம் நிதி நிறுவனத்தில் கணக்கு வைத்திருந்து செலுத்தியதற்கான கணக்கு பட்டியலில் மே 2010 ஆம் ஆண்டிலிருந்து செப்டம்பர் 2018 வரை ஒவ்வொரு பிரதி மாதமும் தவணை தொகை ரூ.7,041/- வாதியால் 101 மாத காலம் செலுத்தப்பட்டு, கடன் ரூ.5,25,000/- செலுத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது மற்றும் வா.சா.ஆ.1 ல் முதல் மாத தவணை தொகை 01.05.2010 அன்று தொடங்குகிறது என்பதை அறிய முடிகிறது. மேலும் வா.சா.ஆ.1 ல் கிரைய தொகை ரூ.5,25,000/- Sundaram BNP Paribas Home Finance Limited மூலம் வழங்கப்பட்ட HDFC Bank, CBE Cheque No.005723 date 13.04.2010 பெற்றுக்கொண்டதாக கூறப்பட்டுள்ளது.

**7.3 பிரதிவாதியின் எதிர்வழக்குரையில்,** " பிரதிவாதியின் சீதன நகை 15 பவுன்களை விற்பனை செய்ய வேண்டுமென சொன்ன ஆசை வார்த்தையை நம்பி மேற்படி நகைகளை விற்றும், ***தான் பணிபுரிந்த சமயத்தில் சேமித்த பணம், மற்றும் உறவினர்களிடம் வட்டியில்லாத கடன் ஆகியவைகளை சேர்த்து ரூ.6,50,000/- பணத்தை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார்.***

7.4 அதன் பின்னர், ***தாவா சொத்தை ஒரு கிருஷ்ணன் என்பவரிடம் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ம் தேதி ரூ.10,50,000/-க்கு கிரையம் பேசி அதற்கு முன் பணமாக ரூ.6,50,000/-த்தை கொடுத்து ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. மூன்று மாத காலத்திற்கு மீதி கிரைய தொகையை செலுத்தி கிரையம் பெற்றுக் கொள்ள வேண்டுமென பேசி முடிக்கப்பட்டதன் பேரில் மூன்று மாத காலத்திற்குள் தொகையை செலுத்த முடியாததால், வங்கி***

***மூலம் கடன் பெற்று கிரையம் பெறலாம் சுந்தரம் ஹோம் பைனான்ஸ்ல் வீட்டுக்கடன் கேட்ட போது பிரதிவாதிக்கு ஊதியம் வங்கி கணக்கின் வரவில்லை என்பதால் அவரது பெயரில் கடன் வாங்க முடியாது என கூறியுள்ளதால்***, வாதியிடம் கேட்ட பொழுது முதலில் வாதி மறுத்துள்ளார் என்றும், பிறகு பிரதிவாதி மாத மாதம் தொகையை ரொக்கமாக செலுத்தி விடுவதாக கூறியதன் பேரில் வாதி ஒப்புக்கொண்டுள்ளார்.

***7.5 ஆகவே மேற்படி வீட்டு கடன் மூலம் தொகையை ஏற்பாடு செய்து கடந்த 13.04.2010 தேதியன்று கிரைய ஆவண எண்.3011/2010 தாவா சொத்தானது பிரதிவாதியின் பெயரில் வாங்கப்பட்டது.*** பிரதிவாதி, வாதிக்கு மாத மாதம் வங்கி கடனுக்கு பிடித்தம் செய்த ரூ.7,041/- தொகையை செலுத்தி வந்துள்ளார் " எனக் கூறப்பட்டுள்ளது. தாவா சொத்தை கிரையம் பெற சுந்தரம் ஹோம் பைனான்ஸ்ல் கிரைய தொகை ரூ.5,25,000/- கடன் பெறப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

**7.6** வா.சா.ஆ.3 ல் வாதி மனோகரன் பெயர் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளது. பிரதிவாதியின் பெயர் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.2 ல் சுந்தரம் ஹோம் பைனான்ஸ்-ற்கு வாதியும், பிரதிவாதியும் MOD எழுதிக் கொடுத்து கிரைய ஆவணத்தை கொடுத்திருந்தால் கூட வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 வரையுள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதி தான் சுந்தரம் ஹோம் பைனான்ஸ்ல் கடன் பெற்ற ரூ.5,25,000/- த்தையும் செலுத்தியுள்ளார் என்பதை கூறுகின்றன. பிரதிவாதி தவணை தொகை மாத மாதம் வாதிக்கு செலுத்திய பின்பு வாதி செலுத்தினார் என்பதற்கான

எந்த ஆவணங்கள் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்படவில்லை.

**7.7** வா.சா.ஆ.4 வாதியின் SBI வங்கியின் பாஸ் புக் ஆகும். வா.சா.ஆ.5 HDFC வங்கி சிங்கநல்லூர் கிளை சேமிப்புக் கணக்கிற்கான கணக்கு பட்டியல் ஆகும். வாசா.ஆ.5 ல் 14.12.2015 ரூ.7,041/- , 17.02.2016 ரூ.7,041/-, 14.03.2016 ரூ.7,041/-, 16.05.2016 ரூ.7,041/-, 14.06.2016 ரூ.7,041/-, 14.07.2016 ரூ.7,041/-, 16.08.2016 ரூ.7,041/-, 14.10.2016 ரூ.7,041/-, 14.11.2016 ரூ.7,041/-, 14.12.2016 ரூ.7,041/-, 17.01.2017 ரூ.7,041/-, 14.02.2017 ரூ.7,041/-, 14.03.2017 ரூ.7,041/-, 15.04.2017 ரூ.7,041/-, 15.05.2017 ரூ.7,041/-, 14.06.2017 ரூ.7,041/-, 14.07.2017 ரூ.7,041/-, 14.08.2017 ரூ.7,041/-, 14.09.2019 ரூ.7,041/-, 16.10.2017 ரூ.7,041/-, 14.11.2017 ரூ.7,041/-, 14.12.2017 ரூ.7,041/-, 15.01.2018 ரூ.7,041/-, 14.02.2018 ரூ.7,041/-, 14.03.2018 ரூ.7,041/-, 16.04.2018 ரூ.7,041/-, 14.05.2018 ரூ.7,041/-, 14.06.2018 ரூ.7,041/-, 16.07.2018 ரூ.7,041/-, 14.08.2018 ரூ.7,041/-, 14.09.2018 ரூ.7,041/- ஆகிய தேதிகளில் வாதியின் வங்கி கணக்கிலிருந்து சுந்தரம் ஹோம் பைனான்ஸ்-ற்கு மாத தவணை தொகை ரூ.7,041/- செலுத்தப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.6 சுந்தரம் ஹோம் பைனான்ஸ்ன் வாதியின் கணக்கு பட்டியலில் ரூ.5,25,000/- கடன் பெறப்பட்டு, கடன் முடிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

**7.8 வா.சா.1 குறுக்கு விசாரணையில்,** " பிரதிவாதி என்னுடைய இரண்டாவது மனைவி என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிக்கும் 28.08.1998 தேதியில் சேலம் மணக்காட்டில் பிரதிவாதி வீட்டில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எங்கள் திருமணம் கிறிஸ்துவ முறைப்படி நடைபெற்றது என்றால் சரிதான். எங்கள் திருமணத்தின் போது பிரதிவாதி வேலை பார்க்கவில்லை. Bethel

Matriculation School St.Johns Nursery and Primary School, Coimbatore out lay of Velankanni Matriculation School வேலை பார்த்து வந்தார் என்றால் திருமணத்தின் போது வேலை பார்க்கவில்லை. அதன் பின்னிட்டு தான் மேற்படி பள்ளிகளில் வேலை பார்த்தார்.

**7.9** என் முதல் மனைவி சாருலதா சசிக்குமாருடன் பழக்கம் ஏற்பட்டு அவருடன்சென்று விட்டார். நாளது தேதி வரை அவருக்கும் எனக்கும் தொடர்பு கிடையாது. எனக்கும் சாருலதாவிற்கும் ஒரு மகன் ரஞ்சித்குமார் என்றால் சரிதான். என் மகன் என்னுடன் உள்ளாரா என்றால் 1ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை ராசிபுரம் புது சத்திரத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் எனது சகோதரி ஜானகியின் பராமரிப்பில் இருந்து படித்து வந்தார். கல்லூரிக்கு சென்றவுடன் என்னுடன் இருந்தார். தற்போது கோவை கணபதி பகுதியில் தனியாக வசித்து வருகிறார்.

**7.10** சசிக்குமார் 2017 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். சசிக்குமார் இறந்த பின்னிட்டு, சாருலதாவும், என் மகனும் என்னுடன் தான் உள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆசிரியர் பணியில் மாத சம்பளம் பெற்று வந்தார் என்றால் சரிதான். குறுகிய காலத்திற்கு **மாத ரூ.1000/- அளவில் மாத சம்பளம் பெற்றார்.** நான் என்னுடைய வருமானத்தைக் கொண்டு பிரதிவாதி பெயரில் தாவா சொத்தை கிரையம் வாங்கி வைத்தேன். தனிப்பட்ட வருமானத்தில் தான் தாவா சொத்து மற்றும் இதர சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. 27.11.2020 தேதியில் பிரதிவாதி எனக்கு எதிராக கோவை அனைத்து மகளிர் காவல்

நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். பொய் புகார் அளித்தார். விசாரணையில் நான் கலந்துகொள்ளவில்லை என்றால் கலந்துகொண்டேன். அப்போது காவல் ஆய்வாளர் இருவரையும் சேர்ந்து வாழ்வதற்கு அறிவுறுத்தினார். ஆனால் நாளது தேதி வரை பிரதிவாதி என்னுடன் சேர்ந்து வாழ வரவில்லை. பிரதிவாதி தற்போது அவருடன் சகோதரி வீட்டில் குடியிருக்கிறார் என்றால் சரிதான்.

**7.11** 2018 ஆம் ஆண்டு நான் பணி ஓய்வு பெற்று விட்டேன். பணி ஓய்வு தொகையிலிருந்து பிரதிவாதியின் உறவினர்கள் டேனியல் சுந்தர்சிங், அருண்குமார் ஆகியோருக்கு தொகை கொடுத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அருண்குமாருக்கு வங்கி மூலமும், டேனியல் சுந்தர்சிங்கிற்கு என் மனைவி மூலமும் பணம் கொடுத்துள்ளேன். பிரதிவாதி அசல் ஆவணங்களை எடுத்துச் சென்று விட்டதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள் தான் பொய் புகார் கொடுத்துள்ளார்கள். கிரைய தொகை முழுவதையும் நான் தான் செலுத்தினேன். மதுக்கரை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் புகார் கொடுக்கப்பட்டு, அவ்வழக்கு DVA No.07/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அழைப்பாணை சார்வு செய்யப்படவில்லை. **கிரைய தொகை முழுவதையும் நான் தான் செலுத்தினேன். ஆவணம் மட்டும் என் மனைவி பெயரில் உள்ளது.** நான் என்னுடைய முதல் மனைவி மற்றும் எனது மகன் ஆகியோர் பிரதிவாதியை தாவா சொத்திலிருந்து அக்கிரமமாக வெளியேற்றி விட்டோம் என்றால் சரியல்ல " என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து வாதி தான் கிரையம் பெற வாங்கிய கடன் தொகை ரூ.5,25,000/- த்தை வட்டியுடன் தவணை

முறையில் வாதியின் கணக்கிலிருந்து செலுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

**7.12 வா.சா.2 மணி** சுந்தரம் ஹோம் பைனான்ஸ்ல் legal manager ஆக பணிபுரிந்தவர். அவர் தனது முதல் விசாரணையில், " கடந்த 13.04.2010 ம் தேதியில் வழக்கின் பிரதிவாதியான அற்புதலில்லியும் அவரது கணவரான மனோகரனும் சேர்ந்து உங்கள் நிறுவனத்திடம் ரூ.5,25,000/- அடமான கடன் வாங்கினார்கள் என்றால் சரிதான். அந்த கடன் தொகைக்கு தவணை தொகையாக மாதம் ரூ.7,041/- வீதம் மனோகரனின் வங்கி கணக்கில் இருந்து செலுத்தப்பட்டு வந்தது. மேற்படி மனோகரனின் கடன் கணக்கு வா.சா.ஆ.6. வழக்கின் பிரதிவாதியான அற்புதலில்லி மேற்படி அடமான கடன் கணக்கிற்கு நேரிலோ ரொக்கமாகவோ அவரது வங்கி கணக்கு மூலமாகவோ அடமான கடனுக்கு தவணை செலுத்தியதில்லை என்று சொன்னால் சரிதான் " என சாட்சிய அளித்துள்ளார்.

**7.13 மேலும் வா.சா.2 ன் குறுக்கு விசாரணையில்,** " வா.சா.ஆ.6 கடன் கணக்கில் Co- applicant ஆக அற்புதலில்லி உள்ளார் என்றால் சரிதான். கடன் தொகையை வாதி மனோகரனும், பிரதிவாதி அற்புதவள்ளியும் சேர்ந்து தான் திருப்பி செலுத்தினார்கள் என்றால் சரியல்ல. அடமான கடனிற்குண்டான கடன் தவணை வாதி மனோகரனின் வங்கி கணக்கிலிருந்து எங்களுக்கு செலுத்தப்பட்டது. கடன் என்ன காரணத்திற்காக கொடுக்கப்பட்டது என்றால் ஆவணத்தை பார்த்துதான் சொல்ல இயலும். வா.சா.ஆ.1 ல் உள்ள சொத்தின் பேரில் அடமான கடன் கொடுக்கப்பட்டது "என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா2 தனது சாட்சியத்தில் அடமான கடன் என்று கூறி இருந்தால் கூட வா.சா.ஆ.2 பரிசீலனை செய்கையில்

கிரைய ஒப்பந்தம் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதியே தாவா சொத்தை கிரையம் பெற தான் வா.சா.ஆ.2 ல் கூறிய அடமான கடன் ரூ.5,25,000/- பெறப்பட்டது என எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள போதும், வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்திலும் கிரைய தொகை ரூ.5,25,000/- ம் காசோலை மூலம் விற்பனையாளருக்கு சுந்தரம் ஹோம் பைனான்ஸ் மூலம் தான் வழங்கப்பட்டுள்ளது. வா.சா.2 ன் சாட்சியம், வா.சா.1ன் சாட்சியத்தை நிரூபணம் செய்யும் விதமாக அமைந்துள்ளது.

**7.14** வா.சா.ஆ.1 13.04.2010 ஆம் வருடம் ரூ.5,25,000/- த்திற்கு கிரையம் பெறப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ல் வாதியின் EMI தொகை ரூ.7,041/- என மே 2010 முதலில் ஆரம்பித்து 101 மாதங்கள் என செப்டம்பர் 2018 வரை வாதியின் கணக்கிலிருந்து சுந்தரம் ஹோம் பைனான்ஸ் ற்கு வாதியால் தான் செலுத்தப்பட்டுள்ளது என்று அறிய முடிகிறது. வாதியின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களுக்கு எதிராக பிரதிவாதி தனது சம்பாத்தியம் மற்றும் நகைகளை விற்று தான் தாவா சொத்து வாங்கப்பட்டுள்ளது எனக் கூறி கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து, சாட்சியம் அளித்துள்ளார்.

**7.15** ஆனால் பி.சா.ஆ.1 Sacrer Heart English Medium பள்ளி சான்றிதழ், பி.சா.ஆ.2 Bethal Matriculation School பள்ளி சான்றிதழ், பி.சா.ஆ.3 St. Johns Nursery and Primary School, Coimbatore சான்றிதழ், பி.சா.ஆ.4 Our lay of Velankanni Matriculation பள்ளி சான்றிதழ் ஆகியவற்றை பார்வையிட்டதில் பிரதிவாதி மேற்கண்ட பள்ளிகளில் பணிபுரிந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. ஆனால் சம்பளம் பற்றிய எந்த குறிப்பும் இடம் பெறவில்லை. பி.சா.ஆ.5 ல் வாதி மீது பிரதிவாதி

கொடுத்த புகாரின் நகல்.பி.சா.ஆ.6 புகார் ஏற்பு சான்றிதழிலில் மனோகரன் மற்றும் ரஞ்சித்குமார் மனுதாரரின் சொத்தை பிடுங்குவதற்காக மனுதாரரை கொடுமை செய்ததாக குறிக்கப்பட்டுள்ளது. பி.சா.ஆ.7 DVA மனு. பி.சா.ஆ.8 ஆதார் அட்டை நகல் ஆகிய பி.சா.ஆ.1 முதல் 8 வரையிலான சான்றாவணங்கள் அனைத்தும் பிரதிவாதியால் ரூ.6,50,000/- முன் பணம் கொடுக்கப்பட்டும் கிரைய தொகை ரூ.5,25,000/- கொடுக்கப்பட்டும், வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் ரூ.5,25,000/- த்திற்கு ஏற்படுத்தப்பட்டது மற்றும் சுந்தரம் ஹோம் பைனான்ஸ்ல் பெற்ற ரூ.5,25,000/- த்திற்கான அசலும் வட்டியும் செலுத்தப்பட்டது என்பதை பிரதிவாதியால் நிரூபணம் செய்யப்படவில்லை.

**7.16 பி.சா.1 குறுக்கு விசாரணையில், "** *என்னை எனது கணவர் திருமணம் செய்யும் முன்பே சாருலதா என்ற பெண்ணை திருணம் செய்து அவருக்கு 5 வயது ஆண் குழந்தை இருந்தது என்று சொன்னால் சரிதான். திருமணம் நடந்த விவரம் தெரிய வந்து நான் எனது கணவர் மீது புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை",* பி.சா.ஆ.5 புகாரில் எனது கணவர் மனோகரன் மனோகரனுக்கும் சாருலதாவிற்கும் திருமணம் நடைபெற்று ரஞ்சித்குமார் மகன் இருந்தபோது சாருலதா என் கணவரை விட்டுவிட்டு வேறு ஒரு நபரை திருமணம் செய்த வேளையில் எனது கணவர் கேட்டுக் கொண்டதற்காக இரு வீட்டு பெரியோர்கள் முன்னிலையில் கிறிஸ்துவ முறையில் 28.08.1998 தேதியில் எனக்கும் மனோகரனுக்கும் திருமணம் நடைபெற்று என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன், எனது கணவருக்கு ஏற்கனவே 5 வயது குழந்தை இருந்ததால், குழந்தை

பெற்றுக்கொள்ள வேண்டாம் என முடிவு செய்து அவருடன் வாழ்க்கையை தொடங்கினேன் என குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**7.17** நான் பணிபுரிந்தததாக சொல்லும் பள்ளிகளில் நன்னடத்தை சான்றிதழ் பெற்று தாக்கல் செய்துள்ளேன். சம்பள சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சம்பள பணத்தை அப்போது கையில் கொடுத்ததால், சான்று கொடுக்க மாட்டார்கள். 1988 முதல் 1989 வரை பள்ளியில் என் சம்பளம் கொடுத்தார்கள் என்றால் ரூ.1,500/- . ரூ.1,500/- சம்பளம் பெறும் போது, எனக்கும் வாதிக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரிதான். டியூசன் எடுப்பதன் மூலம் எனக்கு வருமானம் கிடைக்கும்.

**7.18** டியூசன் எடுப்பதன் மூலம் எனக்கு வருமானம் கிடைக்கும் என்பதை எதிர்வழக்குரையிலும், முதல் சாட்சியத்திலும் சொல்லவில்லை. தற்போது நீதிமன்றத்தில் தான் முதன் முதலாக சொல்கிறேன் என்றால் சரிதான். 30.06.1998 முதல் 30.10.2000 வரை Bethel Matriculation School ரூ.4,000/- மும், St.Johns Nursery and Primary School , Coimbatore ரூ.4,000/- மும், out lay of Velankanni Matriculation School ரூ.4,000/- மும் பெற்றேன். நான்கு பள்ளியிலும் எனக்கு சம்பள சான்றிதழ் கொடுக்க மாட்டார்கள். சம்பளம் கையில் தான் கொடுத்தார்கள். மேற்படி பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்ட சம்பளத்தை சரிபார்க்க Accounts staff உள்ளார்களா என்றால் பள்ளிகள் சிறிய பள்ளிகள் என்பதால் Accounts staff இல்லை. மேற்படி நான்கு பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்பு வரையே உள்ளது. 8 ஆசிரியர்கள் தான் உள்ளனர். தாளாலரே பார்த்துக் கொள்வார். மேற்படி பள்ளி

நிர்வாகத்திற்கு அழைப்பாணை அனுப்பி சாட்சியாக விசாரிக்க ஆட்சேபனை உள்ளதா என்றால் மேற்படி பள்ளிகள் இல்லை. கும்பகோணம் தீ விபத்திற்கு பிறகு பள்ளியை மூடிவிட்டார்கள்.

**7.19** பி.சா.ஆ.3 ல் பள்ளி முத்திரை தலைகீழாக வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் வாங்க என்னுடைய நகைகளை விற்பனை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் அக்காவிடம் விற்றுள்ளேன். **நான் சொல்வதை போல வாதியின் முதல் மனைவி திரும்ப வரவில்லை என்றாலும், அவர் வேறு திருமணம் செய்து கொண்டு சென்றுவிட்டார் என்று சொன்னால் சரிதான்.** ***வாதி தாக்கல் செய்துள்ள இந்த சிவில் வழக்கை வாபஸ் வாங்க வேண்டுமென்று நெருக்கடி கொடுக்க வாதி மீதும், அவர் மகன் மீதும் மதுக்கரை உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதித்துறை நீதிமன்றத்தில் குடும்ப வன்முறை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வழக்கு இவ்வழக்கை வாதி தாக்கல் செய்த பின்பு நான் வழக்கு தாக்கல் செய்தேன்*** என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து பிரதிவாதியால் சம்பள பட்டியல் தாக்கல் செய்யவில்லை, பிரதிவாதியால் வாசா.ஆ.2 ல் பெற்ற கடன் தொகை ரூ.5,25,000/-த்தை செலுத்தப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

**7.20** மேலும் பிரதிவாதியின் 15 பவுன் நகைகள் எவ்வளவு தொகைக்கு விற்கப்பட்டது. வா.சா.ஆ.1 ல் கூறப்பட்டுள்ள ரூ.5,25,000/ த்தை பிரதிவாதி எவ்வாறு தயார் செய்தார் நகையை வாங்கியதாக கூறும் பிரதிவாதியின் சகோதரியை கூட இவ்வழக்கில்

பிரதிவாதி விசாரிக்கததற்கான காரணம் என்ன, பிரதிவாதியின் மாத சம்பளம் எவ்வளவு, தாவா சொத்து கிரையம் பெறும் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்தம் தாவா சொத்தின் முந்தைய உரிமையாளர் கிருஷ்ணன் ஆகியோரை விசாரித்து கூட பிரதிவாதி கூறும் பொருண்மைகளை பிரதிவாதி நிரூபணம் செய்யவில்லை. பிரதிவாதி தான் **இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 106 ன்** படி சம்பள பட்டியலை தாக்கல் செய்து ஆசிரியர் பணிக்கு சென்று சம்பளம் பெற்றார் என்பதை நிரூபணம் செய்யும் முதல்நிலை பொறுப்பு பிரதிவாதிக்கே உள்ளது.

**7.21** ஆனால் பிரதிவாதியால், பிரதிவாதியின் மாத சம்பளம் எவ்வளவு, வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ள ரூ.5,25,000/- பிரதிவாதியால் தான் செலுத்தப்பட்டது என்பது பிரதிவாதியின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது. வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் பிரதிவாதி பெயரில் இருந்தால் கூட வாதியால் ரூ.5,25,000/- செலுத்தப்பட்டுள்ளது என வாதியின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் நிரூபணம் செய்கின்றன. இந்நிலையில், ரூ.5,25,000/- கடன் பெறப்பட்டு வாதியால் வட்டியும் , அசலும் வாதியால் செலுத்தப்பட்டுள்ளது என்ற போது வாதி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்றும், பிரதிவாதி பெயரில் பெயரளவிற்கே தாவா சொத்து கிரையம் செய்யப்பட்டுள்ளது என்று வாதி கூறுவது ஏற்கத்தக்கதாகவே உள்ளது.

**7.22** வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 வரையுள்ள சான்றாவணங்கள் அனைத்தும் 2010 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் வா.சா.ஆ.1 கிரையம் ஏற்படுத்தப்படும் போது, வாதியால் ஏப்ரல் மாதம் 2010 ஆம் வருடம் சுந்தரம் ஹோம் பைனான்ஸ்ல் பெற்ற கடன்

ரூ.5,25,000/- வாதி, பிரதிவாதி இருவரும் பெற்றுள்ளார்கள் என்பதும், வாதி தான் அக்கடனை திருப்பி செலுத்தியுள்ளார் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ள போது, வாதி கோரியபடி வா.சா.ஆ.1 க்கான கிரைய தொகை ரூ.5,25,000/- வாதியால் செலுத்தப்பட்டுள்ளது என்பதும், ரூ.5,25,000/- கடன் தொகையை வாதியே செலுத்தியுள்ளார் என்பதும், வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகளின் சாட்சியமும், வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 வரையுள்ள சான்றாவணங்களும் நிரூபணம் செய்கின்றன. ஆகவே வாதி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா எண்.1 ற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

**8. <u>எழுவினா எண்.2 ற்கான தீர்வு :-</u>**

*2. தாவா சொத்தை பிரதிவாதி எவ்வித வில்லங்க விவகாரங்களுக்கும் உட்படுத்தக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?*

**8.1** எழுவினா எண்.1-ல் தாவா சொத்தின் உரிமையாளர் வாதி தான் என தீர்வு கண்டுள்ள நிலையில், வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் பிரதிவாதி பெயரில் உள்ள நிலையில், பிரதிவாதி தாவா சொத்தை விற்பனை செய்யவோ ,அடமானம் செய்யவோ அல்லது வேறு ஏதேனும் வில்லங்கத்திற்கு உட்படுத்தவோ கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்குவது நீதியின் பால் உகந்தது என்றும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கவில்லை

என்றால் தாங்க முடியாத இழப்பு ஏற்படும் என்பதாலும், Balance of convenince வாதியின் பக்கமே உள்ளது என்பதால் பிரதிவாதி தாவா சொத்தை விற்பனை செய்யவோ, அடமானம் செய்யவோ அல்லது வேறு ஏதேனும் வில்லங்கத்திற்கு உட்படுத்தவோ கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா எண்.2 ஆனது வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

**9. <u>எழுவினா எண்.3 ற்கான தீர்வு</u>**

வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்த எழுவினா எண்.3 ற்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,**

1. இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்திற்கு வாதி தான் உரிமையாளர் என விளம்புகை பரிகாரமும், தாவா சொத்தை பிரதிவாதி எந்தவித வில்லங்க விவகாரங்களுக்கும் உட்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் ,

2. வழக்கின் செலவுத்தொகையை பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டுமென தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. உரிமையியல் நடைமுறை விதி 89 ன் கீழ் சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் சார்பவதிவாளர் இத்தீர்ப்பாணை குறித்து பதிவு மேற்கொள்ளும் வகையில் தீர்ப்பாணையின் நகலை கோவை, சிங்காநல்லூர் சார்பதிவாளருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பவும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஜூலை 06 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SIVASWAMY DHANALAKSHMI
Digitally signed by SIVASWAMY DHANALAKSHMI
Date: 2026.07.06 19:10:46 +0530

மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,

கோயம்புத்தூர்.

**சாட்சி பட்டியல்**

**வாதி தரப்பு சாட்சிகள் :-**

வா.சா.1 – D.மனோகரன் ( வாதி

வா.சா.2 – S.மணி

**பிரதிவாதி தரப்பு சாட்சி :-**

பி.வா.சா.1 - அற்புதலில்லி ( பிரதிவாதி )

**சான்றாவணங்கள் பட்டியல்**

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.04.2010 | மனோகரன் பெயரிலுள்ள கிரைய பத்திரத்தின் கணினி நகல் |
| வா.சா.ஆ.2 | 13.04.2010 | Memorandum confirming deposit of tile deed கணனி நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | | வாதி சுந்தரம் ஹோம் நிதி நிறுவனத்தில் வரவு செலவு வைத்திருந்தற்கான |
| வா.சா.ஆ.4 | | வாதி சிங்கநல்லூர் கிளை SBI Bank பாஸ்புத்தகத்தின் அசல் |
| வா.சா.ஆ.5 | | வாதி HDFC வங்கி சிங்கநல்லூர் கிளை சேமிப்புக்கணக்கிற்கான கணினி கணக்கு பட்டியல் |
| வா.சா.ஆ.6 | | மனோகரனின் கடன் கணக்கு |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | | Sacrer Heart English Medium பள்ளி சான்றிதழ் அசல் |
| பி.வா.சா.ஆ.2 | | Bethal Matriculation School பள்ளி சான்றிதழ் அசல் |
| பி.வா.சா.ஆ.3 | | St Johns Nursery and Primary School, Coimbatore சான்றிதழ் |
| பி.வா.சா.ஆ.4 | | Our lay of Velankanni Matriculation பள்ளி சான்றிதழ் அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 25.11.2020 | பிரதிவாதி வாதியின் மீது அளித்த புகார் நகல் |
| பி.வா.சா.ஆ.6 | | புகார் மனு ஏற்பு சான்றிதழ் அசல் |
| பி.வா.சா.ஆ.7 | | DVA 7/2022 E courts status பதிவிறக்க நகல் |
| பி.வா.சா.ஆ.8 | | பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் |

SIVASWAMY DHANALAKSHMI

Digitally signed by SIVASWAMY DHANALAKSHMI
Date: 2026.07.06 19:10:53 +0530

மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,

கோயம்புத்தூர்.

சீரான / வரைவு தீர்ப்புரை

O.S.No.1192/220

நாள் 06.07.2026

III ASJ, Cbe